# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 17, 2019

Weekly E-paper • AUGUST 17, 2019






## பூணூல் போதாதா? கையில் கயிறும் வேண்டுமோ?

சுப. வீரபாண்டியன்



### இத்தாலி – காஷ்மீர்

எழில். இளங்கோவன்

தலையங்கம்

### வரலாறு ஒரு நாள் திரும்பும்



### திருக்குறள் மாநாடு

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஆகஸ்ட் 17, 2019 Weekly E-paper ● AUGUST 17, 2019


# பூணூல் போதாதா? கையில் கயிறும் வேண்டுமா?

சுப. வீரபாண்டியன்

கடந்த 31 ஆம் தேதி, தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை இயக்குனர், தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் செயல்முறை நடவடிக்கை அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் இனிமேல் பள்ளிக்கு வரும் மாணவர்கள், சாதியின் அடையாளமாகக் கைகளில் கட்டிக்கொண்டு வரும் வண்ணக் கயிறுகள், நெற்றித்திலகம் ஆகியன கூடாது என்றும், அதனை உடனே தடுக்க வேண்டும் என்றும், அவற்றைக் கட்டச் சொல்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இயக்குனர் தெரிவித்திருந்தார்.

சாதி அடையாளத்திற்கு எதிரான இந்த அறிக்கையைத் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட பலரும் வரவேற்றனர். இப்படி ஒரு முற்போக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள தமிழக அரசையும். பள்ளிக் கல்வி அமைச்சரையும் நம் போன்றவர்களும் பாராட்டினோம்!

ஆனால், பாஜகவின் தேசியச் செயலாளர்களில் ஒருவரான ஹெச். ராஜா என்னும் ஹரிஹர ராஜா சர்மா அதனைக் கண்டித்தும், தமிழக அமைச்சரை மிரட்டியும் அறிக்கை விட்டார். அது ஒரு ஹிந்துப் பழக்கம், அதனை எப்படித் தடை செய்யலாம் என்று கேட்டார்.

மிரண்டுபோன தமிழக அமைச்சர் செங்கோட்டையன், அந்த அறிக்கை



பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும், பழைய நடைமுறையே தொடரும் என்றும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தனக்குத் தெரியாமல் ஓர் அறிக்கை தன் துறையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது என்று கூற ஓர் அமைச்சர் வெட்கப்பட வேண்டாமா? இவ்வளவு அச்சத்தில் வாழும் கோழைகளாக அமைச்சர்கள் இருக்கலாமா? நேர்மையானவர்கள்தாம் அச்சமற்று இருக்க முடியும் என்பதையே இது காட்டுகிறது.

இதனை இந்துப் பழக்கம் என்கிறார் ராஜா சர்மா. எந்த இந்து நூல், கையில் கயிறு கட்டச் சொல்கிறது? மதத்திற்கும் இதற்கும் என்ன தொடர்பு? பேய், பிசாசு என்று பயந்துகொண்டும், காசிக் கயிறு என்னும் பெயரிலும், கைகளில் கறுப்புக் கயிறு கட்டியுள்ளவர்களைப் பார்க்க முடியும். ஆனால் இந்தச் சாதியினர் இந்த வண்ணத்தில் கயிறு கட்ட வேண்டும் என்பது எப்படி மதம் சார்ந்த பழக்கமாக இருக்க முடியும்?

இப்போதும் பார்ப்பனர்கள் சிலர் நம்மை முதுகில் தட்டிக் கொடுத்தால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் நம்மைப் பாராட்டுவதற்காகத் தட்டிக் கொடுக்கவில்லை. பூணூல் இருக்கிறதா என்று பார்ப்பதற்காகவே முதுகைத் தடவுகின்றனர்.

இப்போது அந்தச் சிரமம் கூட வேண்டாமென்று, கைகளில் கயிறு கட்டி வரவேண்டும் என்கின்றனர். ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வண்ணம் என்று முடிவு செய்து, அந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் அந்த வண்ணத்தில்தான் கயிறு கட்டிக் கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு பெரிய கொடுமை!

தங்களை இந்துக்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் மக்களே, சாதி இழிவே உங்கள் கைகளில் கயிறுகளாகக் கட்டப்பட்டுள்ளன. எப்போது அறுத்தெறியப் போகின்றீர்கள்? ●

# எது ராஜதந்திரம்?

- சுபவீ



கண்ணனும் அர்ஜுனனும் மறுபடி அவதரித்து விட்டார்களாம். ஆனால் யார் கண்ணன், யார் அர்ஜுனன் என்று தெரியவில்லையாம். கவலைப்படுகிறார் ரஜினிகாந்த். நாமும் கவலைப்படுகிறோம் - யார் மீது போர் தொடுக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணி! அன்று யூத மக்களின் மீது இட்லர் போர் தொடுத்தார். இன்று இஸ்லாமியர்கள் மீது மோடி போர் தொடுத்துள்ளார்.

மக்களின் உரிமைகளைப் பறிப்பது ராஜதந்திரம் என்கிறார் ரஜினிகாந்த். தனக்கு வந்தால் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்!

# அன்று இத்தாலி இன்று காஷ்மீர்

எழில். இளங்கோவன்

வரலாறு மாறிக் கொண்டுதான் இருக்கும். அதற்கு இத்தாலியும் ஒரு எடுத்துக் காட்டு. இது ஜம்மு - காஷ்மீருக்கும் பொருந்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 370, ஜம்மு - காஷ்மீரின் சிறப்புரிமைகளை உறுதி செய்திருந்தது. அதன்படி 1949 முதல் ஓரளவு சுதந்திரமாக இருந்த ஜம்மு - காஷ்மீர், இன்று மூன்றாகக் கூறுபோடப்பட்டு விட்டது.

ஆதிக்கம், இந்து மத வாதம் தலைவிரித்தாடும் ஆர்.எஸ்.எஸ். ஆளுமையில் இருக்கும் பா.ஜ.க. வின் மத்திய அரசு இதைச் செய்திருக்கிறது.

1815 ஆம் ஆண்டில் ஆஸ்திரியா, பிரான்ஸ், ஜெர்மன் ஆகிய நேச நாடுகளின் காங்கிரஸ் வியன்னோவில் கூடியது. அங்கே அவைகள் எடுத்த முடிவின்படி இத்தாலியை ரோம், நேபிள்ஸ், மிலான் என்று மூன்று கூறுகளாகப் பிரித்து அவைகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன.

அங்கே ஆதிக்கமும், கிருஸ்துவ மதவாதமும் தலைவிரித்தாடின, அந்த மூன்று நாடுகளில்.

இதனால் இத்தாலியில் சிறு சிறு கலகங்கள் ஆங்காங்கே நடந்தன. அவை வலிமையற்ற, திட்டமிடப் படாத கலகங்களாகவே இருந்தன.

இந்நிலையில் "இத்தாலி மூன்று கூறுகளாகப் போடப்பட்டு விட்டன. இத்தாலியை மீண்டும் ஒரே நாடாக ஆக்க வேண்டும். வலிமையான இத்தாலியக் குடியரசை அமைக்க, வாருங்கள் - வாருங்கள் இளைஞர்களே", என்று ஒரு வலிமையான முழக்கத்தை எழுப்பினான் ஜோசப் மாஜினி.

இந்த முழக்கம் மக்களைக் கவர்ந்தது, குறிப்பாக இளைஞர்களை ஈர்த்தது. அப்போதுதான் "இத்தாலிய இளைஞர் சங்கம்" என்ற இயக்கத்தை உருவாக்கினான் மாஜினி, 1831 ஆம் ஆண்டில் .

"இளைஞர்களே, நாம் சிந்தும் ஒவ்வொரு துளி ரத்தமும், நம் சந்ததியாக்குச் சுதந்திரக் காற்றைக் கொடுக்கும். காலம் கடந்து போகுமுன் நம் கடமையைச் செய்வோம் வாருங்கள். எதிரிகளை விரட்டி ரோம், நேபிள்ஸ், மிலான் ஆகிய நம் தாயகத்தில் நம் இத்தாலியச் சுதந்திரக் கொடியை பறக்க விடுவோம். இத்தாலியர்களே, இளம் இத்தாலியர்களே வாருங்கள், வாருங்கள்" என்று பேசவும் தொடங்கினான் அவன்.

விடுமா வல்லாண்மை அரசு. கைது செய்தது மாஜினியை. நிறுத்தியது நீதிமன்றத்தில். விசாரணை என்ற பெயரில் மாஜினிக்கு மரண தண்டனை



மாஜினி

வழங்கினார் நீதிபதி. தண்டனைக்குரிய 19 ஆம் எண் குற்றவாளியாக மீண்டும் அடைக்கப்பட்ட மாஜினி, தூக்கில் இடப்பட வேண்டிய நாளுக்கு முதல் நாள் சிறையில் இருந்து தப்பி , பிரஞ்ச் புரட்சியின் நாயகன் நெப்போலியன் போனோபாட் பிறந்த கார்சிகா தீவில் தலைமறைவானான்.

அந்தத் தீவில்தான் இத்தாலிய இளைஞர் சங்கத்தினரைக் கருப்புச் சட்டை அணியச் சொல்லி, அவ்வியக்கத்தைக் "கருஞ்சட்டைப் படை" யாக மாற்றிய மாஜினி தான், உலகப் போராளிகளின் முதல் கருஞ்சட்டைத் தலைவன்.

இத்தகைய சூழலில் இத்தாலியின் நிலைமை மோசமாயிற்று. ஒரு பக்கம் ஆஸ்திரியா, மறுபக்கம் நேபிள்ஸ், இன்னொரு பக்கம் பிரான்ஸ் படைகளின் தாக்குதல்கள் கடுமையாக இருந்தன. மதத்தின் பெயரால் மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்டன. மதத்தின் பெயரால் மக்கள் கூறு போடப்பட்டார்கள். மூன்றாகப் பிரிக்கப் பட்ட அன்றைய இத்தாலியில், மதவாதிகளின் தான்தோன்றித் தனமான திட்டங்களாலும், அரச அதிகாரங்களாலும், மக்கள் வாதைக்குள்ளானார்கள், இன்றைய காஷ்மீரைப் போல.

இந்தச் சூழலில் நாடு திரும்பிய மாஜினி மிலான், மசாய்னா பகுதிகளில் புரட்சிக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது இத்தாலி விடுதலையின் இன்னொரு வீரன் கரிபால்டி விடுத்த அழைப்பை ஏற்று, கரிபால்டியுடன் கருஞ்சட்டைப் படையை இணைத்துக் கரிபால்டி தலைமையில் போராட முன் வந்தான் மாஜினி.

"கரிபால்டி - மாஜினி இருவரும் ஆஸ்திரியாவைக் கடுமையாகத் தாக்கினர். பிரஞ்சுப் படையினரைத் தடுத்துப் பின் வாங்கச் செய்தனர். நேபிள்ஸ் படையைத் தோற்கடித்தனர்" என்று சொல்லும் ஜவகர்லால் நேரு, சேவாக், மிலான் ஆகிய பகுதிகள் மீட்கப்பட்டன என்றாலும் இத்தாலியின் விடுதலை அப்போது சாத்தியமாகவில்லை என்றும் கூறுகிறார்.

அடுத்த சில நாள்களில் எதிர்பாராமல் ஆஸ்திரியப் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட மாஜினிக்கு இரண்டாவது தடவையாக மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான்.

அந்தக் கால கட்டத்தில் பீட்மான்டின் அரசன் விக்டர் இம்மானுவேலை இத்தாலியின் மன்னனாக்க முயன்று கொண்டு இருந்தான், அவனின் தலைமை அமைச்சர் கவூர். அதனால் அவன் பிரான்சுக்கும், ஆஸ்திரியாவுக்கும் இடையே தவறான செய்திகளின் மூலம் பகைமையை ஏற்படுத்துகிறான். விளைவு, பிரஞ்சுப் படை ஆஸ்திரியா மீது போர் தொடுத்துத் தோற்கடித்தது. உடனே திட்டமிட்டபடி இம்மானுவேலின் படைகளுடன் கரிபால்டியுடன் இணைந்து பிரஞ்சுப் படையைத் தாக்கிச் சிதறடித்து நேபிள்ஸ், சிசிலியா பகுதிகளைக் கைப்பற்றினார்கள்.

இந்த நிலையில் ஆஸ்திரியா விதித்த மரண தண்டனையிலிருந்து, மாஜினியை விடுவிக்கக் கோரி கலகங்கள் வெடித்தன, ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

லண்டனில் நடைபெற்ற ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தில் காரல் மார்க்ஸ் இப்படிப் பேசினார், " தோழர்களே, இத்தாலி அழிவை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கிறது. நாளை மாஜினிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று செய்தி வந்திருக்கிறது. . . அது நிறைவேறுமானால் அந்த வீரனின் பின்னால் நம்மைப் போன்றவர்கள் இருந்தும் பயனில்லை என்ற பழி வந்து சேரும். . . அகில உலகமும் மாஜினியின் விடுதலைக்காகப் போராடவேண்டும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## முன் பக்கத் தொடர்ச்சி ...

(இத்தாலி) நாடு பிறகு விடுதலையடையட்டும், முதலில் மாஜினி விடுதலையாக வேண்டும். அவனைத் தூக்கிலிட்டால் அந்த அரசாங்கம் இருக்கும் இடம் தெரியாமல் நொறுங்கும். இது நம் எச்சரிக்கை".



## கரிபால்டி

காரல் மார்க்ஸ் இவ்வளவு சூடாகப் பேசியது ஓர் அதிர்வலையை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய இளைஞர் சங்கம், சுவிஸ்சர்லாந்து இளைஞர் சங்கம், மறுமலர்ச்சி இயக்கம், மாணவர் சங்கங்கள், விடுதலைப் போராட்ட இயக்கங்கள், கருஞ்சட்டைப் படையினர் என்று மாஜினியின் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் ஒன்று திரண்டார்கள்.

மக்களின் எழுச்சியைப் பார்த்த ஆஸ்த்திரிய அரசன், மாஜினியை மரண தண்டனையில் இருந்து விடுவித்தான். பின்னர் தந்திரமாகக் கைது செய்து கெய்டா என்ற இடத்தில் சிறையில் அடைத்து விட்டான்.

கரிபால்டி, கவூர் இருவரின் தொடர் போராட்டங்களின் முடிவில், 1861 ஆம் ஆண்டில் விக்டர் இம்மானுவேல் இத்தாலியின் மன்னன் ஆக்கப்பட்டான். ரோம், வெனிஸ் இரண்டும் 10 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை ஆயின.

மதவாதிகளின் ஆட்சி அதிகாரங்களால் மூன்றாகக் துண்டாடப்பட்ட இத்தாலி பின்னாளில் ஒரே நாடாகவும், சுதந்திர இத்தாலியக் குடியரசாகவும் ஆனது.

இறுதியாக ஒரு செய்தி. 1805 ஜூன் 22 ஆம் நாள் ஜெனோவாவில் பிறந்த ஜோசப் மாஜினி, 1872 மார்ச் 10 ஆம் நாள் மரணமடைந்தான். இத்தாலியின் பைசா நகரக் கோபுரத்திற்கு அருகில் அவன் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த வரலாறு அன்றைய இத்தாலிக்கும், இன்றைய காஷ்மீருக்கும் பொருந்தும்.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வரலாறு ஒரு நாள் திரும்பும்

2000 ஆண்டுகளுக்கும் மேலாக வலிமை வாய்ந்த கருத்தியலால் முன்னெடுக்கப்பட்ட பௌத்தம், பௌத்த அரசுகளிடம் தோல்வியடைந்த வேதமதம் என்ற பார்ப்பனியம் வீழ்ச்சியடைவில்லை. மாறாக மீண்டும் மீண்டும் எழுந்து வந்து கொண்டு இருக்கிறது.

தமிழகத்தில் பார்ப்பனியத்தின் சமூக அநீதிகளை எதிர்த்துப் போராடி, பார்ப்பனிய வேகத்தைத் தடுத்து நிறுத்தினார் ஐயா தந்தை பெரியார்.

இந்திய அளவில் பார்ப்பனிய வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள், மனுஸ்மிருதி, வேத இதிகாசங்கள் போன்றவைகளை முன்வைத்துப் பார்ப்பனிய சமூக அநீதிகளை அக்குவேறு, ஆணிவேறாகக் கிழித்துப் போட்டார் பேரறிஞர் டாக்டர் அம்பேத்கர்.

எவ்வளவு அடிகொடுத்தாலும் சாகாமல் உயிர்த்தெழும் பாம்பைப் போல, பார்ப்பனியம் பாம்பின் நஞ்சுக்குச் சமமான வர்ணாசிரம அநீதியை நிலைநாட்ட முனைந்து கொண்டிருக்கிறது.

ஹெக்டேவர், கோல்வால்கர் உள்ளிட்டவர்களினால் விதைக்கப்பட்ட 'ஏகஇந்தியா' என்ற கோட்பாட்டை, 'ராமராஜ்ஜியம்' என்ற பெயரால் உருவாக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸூம் அதன் அரசியல் பிரிவான பா.ஜ.கவும்.

இன்றைய மத்திய பா.ஜ.க அரசு, ராமராஜ்ஜியத்தை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் இந்து மதவாதம், இஸ்லாமிய - கிருத்துவ - தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு எதிரான சமூக அநீதிகளை இழைத்துக் கொண்டிருக்கிறது.

நாளுக்கொரு சட்டம், ஆளுக்கொரு பேச்சு என்பதைச் செய்துகொண்டிருக்கும் பா.ஜ.க அரசு மாநிலங்களுக்கு எதிராக, மாநில சுயாட்சிக்கு எதிராகச் சென்று கொண்டிருப்பது நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிப்பதாகவே அமைகிறது.

சர்வாதிகாரம், மதவாதம், சாதியம் இவைகளினால் மட்டுமே செய்யப்படும் ஆட்சியும், அதிகாரமும் மக்களின் கோபத்தால் தரைமட்டமாகும் என்பது வரலாறு.

## சென்னை திருக்குறள் மாநாடு



2019 ஆகஸ்ட் 12 ஆம் நாள், சென்னை காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டு மேடையில் ஆசிரியர் கி. வீரமணி, சுப.வீரபாண்டியன், திருமாவளவன், கோவை இராமக்கிருட்டிணன், நடிகர் சத்தியராஜ், பொழிலன் உள்ளிட்டோர்.

# திருக்குறள் மாநாடு காலத்தின் தேவை!

வெற்றிச்செல்வன்

தந்தைபெரியார் பேரறிஞர் அண்ணா இருவரும் முன்னின்று நடத்திய திருக்குறள் மாநாட்டிற்குப் பிறகுதான், தமிழ்நாட்டிலே அதுவரையில் திருக்குறளைப் பற்றியே கேள்விப்படாத பாமரன்கூட அது என்ன திருக்குறள் அவர் யார் திருவள்ளுவர் என்று அறிந்து கொள்ள விரும்பினான். அவனுக்குத் திருவள்ளுவரை அறிமுகப்படுத்தத் திராவிட இயக்கம் அன்றைக்கு முன்வந்தது.

– கலைஞர் கருணாநிதி (முரசொலி 17.02.2008)




வளர்ந்து நிற்கும் பார்ப்பன வல்லாதிக்கப் பேராபத்து, தமிழ்ச் சமூகத்தினைப் பெருங்கேடாய்ச் சூழ்ந்து நிற்கும் வேளையில், பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குத் திருக்குறளை ஆயுதமாய் முன்னிறுத்தி நடந்து முடிந்துள்ளது, 12.08.2019 அன்று பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சென்னையில் நடத்திய திருக்குறள் மாநாடு.

பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து தமிழர்களை விடுவிக்கும் போராட்டத்தில், சமுதாயத் துறையில் மட்டுமல்லாது பண்பாட்டுத் துறையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தவர் தந்தை பெரியார். அதற்கான பண்பாட்டுத் தளத்தின் முக்கிய கூறுகளுள் திருக்குறளும் ஒன்று.

திருக்குறள் இந்து சனாதன நூல் என்ற ஒரு பொய்யான பரப்புரை, காவிகளால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், திருக்குறள் மாநாடு அக்கூற்றுக்குத் தெளிவான மறுப்புரையைத் தந்துள்ளது. "ஆரியம்போல் உலகவழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே" என்ற வரிகளோடு மாநாட்டின் தொடக்கத்தில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல், எதிர்க்கப்பட வேண்டிய ஆதிக்கத்தைக் குறிப்பாக உணர்த்திக் காட்டியது சிறப்பு. திருக்குறள், பார்ப்பனியத்திற்கு மனுதர்மத்திற்கு சனாதனத்திற்கு எதிரானதே என்பதை மாநாட்டு அரங்கில் பேசியவர்களின் உரைகள் எதிரொலித்தன. ஒரே தேசம் ஒற்றைக் கலாச்சாரம், இந்தி சமஸ்கிருதத் திணிப்பு, புதிய கல்விக் கொள்கை உள்ளிட்ட ஆதிக்கப் போக்குகளனைத்தையும் விமர்சிக்கும் தளத்தினை இம்மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. அதே நேரம், திருக்குறளைப் புனிதப்படுத்தாமல், திருக்குறளில் உள்ள பெண்ணியம் சார்ந்த பிற்போக்கான கருத்துகளையும் மேடையில் விவாதித்தது, பெரியாரியப் பார்வைக்குச் சான்றாய் அமைந்தது.

திருக்குறள் வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்பினை ஆற்றிய கலைஞரின் செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தாதது, மாநாட்டிற்குப் பொலிவைச் சேர்க்கவில்லை. மாநாட்டின் தொடக்கத்தில் அறச்சுடர் ஏற்றிய நிகழ்வு பெரியாரியத்துக்கு உகந்ததா என்ற கேள்வியும் நம்மிடம் எழாமல் இல்லை.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் திருக்குறளை மக்களிடையே கொண்டுசெல்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைச் சுட்டிக்காட்டியது. திருக்குறளையோ, திருவள்ளுவரையோ ஒரு சாதி அல்லது ஒரு மதத்துக்குள் வரையறுக்க முற்படுவது, குறள் நெறியை வலுவிழக்கச் செய்வதாகும். அத்தகைய முயற்சிகளை முறியடிக்கும் நோக்குடன் இதுபோன்ற மாநாடுகள் நடத்தப்படுவது, காலத்தின் தேவையாகும்.

## திருக்குறள் மாநாட்டுத் தீர்மானங்கள்

1. திருக்குறளை இயக்கப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. தமிழ்நாட்டின் தேசிய நூலாகத் திருக்குறளைத் தமிழ்நாடு அரசு அறிவித்திட வேண்டும்.
3. சாதி சமயமற்ற சமுதாயத்தை நல்வழிப்படுத்திட, திருவள்ளுவரை உள்ளடக்கித் தமிழ்நாட்டின் இலச்சினையை மாற்றியமைக்க வேண்டும்.
4. திருக்குறள் விழாவைப் பண்பாட்டு நிகழ்வாக தமிழர்கள் முன்னெடுத்துக் கொண்டாட வேண்டும்.
5. தமிழர்களின் குடும்ப நடைமுறைகளைத் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு அமைத்துக் கொள்ளவேண்டும்.
6. வழிபாட்டிடங்கள் அனைத்திலும் திருக்குறள் அறிவகம் என்கிற பெயரில் நூலகம் அமைத்திட வேண்டும்.
7. வள்ளுவர் கோட்டம் , கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, நம்பியூர் – குறள் மலை முதலானவற்றைப் பாதுகாக்கவும் சீரமைக்கவும் வேண்டும்.
8. உலகத் திருக்குறள் மாநாட்டைத் தமிழக அரசே நடத்திட வேண்டும்.
9. திருக்குறளைப் பார்ப்பனிய இந்து சனாதனத்தன்மையோடு அடையாளப்படுத்தும் சிலரின் போக்குகளை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,